**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.42/2020 –DW-2**

| | |
|---|---|
| Name | **திரு.மணி** |
| Husband Name | **திரு.முத்துகிருஷ்ணன்** |
| Aadhar Card No. | 7678 8701 4386 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **02.03.2026.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

பி.சா.ஆ.1 கிரையப்பத்திரம் 13.02.2003–ம் தேதி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த கிருஷ்ணன் பெயரிலோ, என் பெயரிலோ பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். கிருஷ்ணன் எனக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் நான்கு எல்லைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கிருஷ்ணன் எனக்கு எழுதிக்கொடுத்துள்ள பி.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின் படி அதில் கண்டுள்ள ஒவ்வொரு சர்வே எண்களிலும் பாதி பாதி சொத்து எனக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஒவ்வொரு சர்வே எண்ணிற்கும் நான்கு எல்லைகள் வெவ்வேறானது என்றால் சரிதான். நான் ரேவதிக்கு எழுதிக்கொடுத்த பி.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் கொடுத்துள்ள நான்கு எல்லைகள் தவறானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தந்தை வேலு கவுண்டர் சொத்து கிரையம் வாங்கியது பற்றி எனக்கு தெரியாது. வேலு கவுண்டருக்கு எங்கள் ஊரில் சொத்து இருந்து அவர் அனுபவம் செய்தது பற்றி எனக்கு தெரியும். அவர் மருதம்பாக்கத்தை சேர்ந்தவர் என்றாலும், எங்கள் ஊரான பிள்ளையார் குப்பத்தில் சொத்து வாங்கி அனுபவம் செய்தார் என்றாலும் சரிதான். அவருக்கு பின்னர் அவருடைய சொத்தை வாதியும், 1–ம் பிரதிவாதியும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தை நான் கிரையம் வாங்கியதாக சொல்வது தவறு என்றாலும், வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் நான் வழக்கு சொத்தை ரேவதிக்கு கிரையம் செய்து கொடுத்ததாக சொல்வதும் தவறு என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வேலு என்பவர் வாதிக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்த பிறகு 1–ம் பிரதிவாதியுடன் நான் கூட்டு சேர்ந்து 4–வது பிரதிவாதி பெயரில் பொய்யாக கிரையப்பத்திரம் உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.